# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br><br>Preliminary Register<br>**Sessions** | } | **Sessions Case No. : 3/2022** |

| | | | | |
|---|---|---|---|---|
| **Deposition of witness for** | **Prosecution** | **:** | **P.W.** | **: 1** |
| | Defence | : | D.W. | : |
| | Court | : | C.W. | : |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பச்சையம்மாள் | வயது | : | 64 |
| க/பெ. | : | கந்தசாமி | தொழில் | : | |
| முகவரி | : | ஓலைப்பாடி | | : | |
| வட்டம் | : | குன்னம் | | : | |
| மாவட்டம் | : | பெரம்பலூர் | | | |

நான் என்ன கூறுகிறேனோ, அதுவே உண்மை என்றும், அவை அனைத்தும் உண்மையென்றும் உண்மையைத் தவிர வேறு இல்லை என்றும் கடவுளின்பெயரிலும் என்னுடைய மனசாட்சிக்குட்பட்டும் உறுதிமொழி ஏற்கிறேன்.

Starting Time: 3.30 PM Date: 26.10.2022

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஓலைப்பாடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு 5 பெண்களும், ஒரு மகனும் உள்ளார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் மருமகன் ஆவார். என் மூன்றாவது மகள் பெயர் செல்வி. செல்வியை சுமார் 15 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரக்கு திருமணம் செய்து கொடுத்தோம். செல்விக்கு சக்திவேல், செல்வகண்ணன் என இரண்டு மகன்கள் உள்ளார்கள். திருமணத்திற்கு பின்பு செல்வி ஓலைப்பாடியில் வாடகை வீட்டில் ஆஜர் எதிரி மற்றும் அவரது குழந்தைகள் , ஆஜர் எதிரியின் பாட்டி அகியோருடன் வசித்து வந்தார்கள். ஆஜர் எதிரி சந்திரசேகர் சென்னையில் கூலி வேலை பார்த்து வந்தார். இரண்டு

அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆஜர் எதிரி ஓலைப்பாடி கிராமத்திற்கு வருவார். ஆஜர் எதிரி ஊருக்கு வரும்போதெல்லாம் அவரது மனைவி செல்வியை திட்டுவது, அடிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவார். சுமார் நான்கு வருடத்திற்கு முன்பு ஒருநாள் காலையில் சென்னையிலிருந்து ஆஜர் எதிரி எங்கள் வீட்டுக்கு வந்தார். அப்போது என் மகள் செல்வி என் வீட்டில் இருந்தார். ஆஜர் எதிரி அவரது மனைவி செல்வியை அவரது வீட்டுக்கு அழைத்தார். செல்வி கணவர் வீட்டிற்கு செல்ல மறுத்துவிட்டார். அதன்பின்பு அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் ஆஜர் எதிரியுடன் அவரது வீட்டிற்கு செல்வி சென்றார். அன்றிரவு சுமார் 1.00 மணியளவில் எனது சின்ன பேரன் எனது வீட்டிற்கு கத்திக்கொண்டு ஓடி வந்து அம்மாவிடம் அப்பா சண்டை இழுப்பதாக கூறினார். அப்போது நானும், என் கணவரும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்றோம். நாங்கள் சென்றபோது ஆஜர் எதிரி அவரது வீட்டிற்கு அருகில் வரதராஜ் என்பவர் வீடு கட்டும் இடத்தில் அவரது மனைவி செல்வியை செத்துப்போடி நாயே என்று கையால் அடித்தார். என் மகள் கீழே விழுந்தார். கற்களில் அடிப்பட்டது. அவருக்கு தலையிலும், மூக்கிலும் காயம் ஏற்பட்டது. அப்போது எதிரி செல்வியை தரத்தரவென இழுத்தவாறு என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று சொல்லி ஓடிவிட்டார். என் மகள் எதிரி அடித்து கீழே தள்ளிவிட்டதில் சுயநினைவை இழந்து விட்டார். சுயநினைவை இழந்து கோமா நிலைக்கு சென்று விட்டார். இன்று வரை என் மகள் செல்வி கோமா நிலையில் தான் சுயநினைவின்றி என் வீட்டில் இருந்து வருகிறார். சம்பவத்திற்கு பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் என் மகள் செல்வியை பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்கு அன்றிரவே சேர்த்தோம். அதன்பின்பு மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு என் மகள் ஒரு மாதத்திற்கு மேல் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றும், தொடர்ந்து கோமா நிலையிலே இருந்து வருகிறார். நான் திருச்சி அரசு மருத்துவமனையில் என் மகளுடன் இருந்தபோது குன்னம்

போலீசார் என்னிடம் வந்து புகார் வாக்குமூலம் வாங்கி வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கைரேகை (சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காண்பிக்கப்பட்டது) என்னுடையது தான். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அதசாஆ. 1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரி கூறினார்.

Ending Time: 3.45 PM.

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br><br>Preliminary Register<br>**Sessions** | } | **Sessions Case No. : 3/2022** |

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness for** | **Prosecution** | : | **P.W. : 2** |
| | Defence | : | D.W. : |
| | Court | : | C.W. : |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமசந்திரன் | வயது | : | 50 |
| த/பெ. | : | சின்னபிள்ளை | தொழில் | : | விவசாயி |
| முகவரி | : | ஓலைப்பாடி | | : | |
| வட்டம் | : | குன்னம் | | : | |
| மாவட்டம் | : | பெரம்பலூர் | | | |

நான் என்ன கூறுகிறேனோ, அதுவே உண்மை என்றும், அவை அனைத்தும் உண்மையென்றும் உண்மையைத் தவிர வேறு இல்லை என்றும் கடவுளின்பெயரிலும் என்னுடைய மனசாட்சிக்குட்பட்டும் உறுதிமொழி ஏற்கிறேன்.

Starting Time: 3.50 PM Date: 26.10.2022

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஓலைப்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என் மனைவி பெயர் மலர்க்கொடி, எனக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரயின் மனைவி பெயர் செல்வி ஆகும். அவர் ஓலைப்பாடியில் குடும்பம் நடத்தி வந்தார்கள். ஆஜர் எதிரி சென்னையில் கூலி வேலை செய்து பார்த்து வருகிறார். ஆஜர் எதிரி சென்னையிலிருந்து வீட்டிற்கு வரும்போதெல்லாம் குடிபோதையில் மனைவியை அசிங்கமாக திட்டியும், அடித்தும் கொடுமை படுத்தினார். 22.07.2018 ம் தேதி ஆஜர் எதிரி சென்னையிலிருந்து ஊருக்கு வந்துள்ளார். அப்போது அவரது மனைவி ஆவரது அப்பா வீட்டில் இருந்தார்.

அன்று மாலை 5.00 மணியளவில் ஆஜர் எதிரியுடன் அவரது மனைவி செல்வி ஆஜர் எதிரி குடியிருந்து வாடகை வீட்டிற்கு சென்றுள்ளார். அதன்பின்னர் 23.07.2018 அன்று அதிகாலை சுமார் 1.00 மணியளவில் சத்தம் கேட்டு வெளியே ஓடினேன். அப்போது ஆஜர் எதிரி அவரது மனைவியிடம் போடி புண்டை மகளே என்று திட்டியும், நாயே, பேயே என்று திட்டி இன்றோடு உன்னை முடித்து கட்டுறேன் என்று திட்டினார். ஆஜர் எதிரி குடியிருந்து வீட்டருகில் வரதராஜ் என்பவர் வீடு கட்டுவதற்காக அஸ்திவாரம் போட்டுள்ளார். அந்த வீட்டின் அருகே ஆஜர் எதிரி இன்றோடு உன்னை முடித்துவிடுவேன் என்று சொல்லி செல்வியின் முகத்தில் ஒரு குத்து குத்தினார். அதனால் செல்வி கிழே விழுந்தார். கீழே விழுந்ததில் அவரது மண்டை உடைந்து மண்டையிலும், முகத்திலும் காயம் ஏற்பட்டது. அப்புறம் ஆஜர் எதிரி செல்வியின் தலைமுடியை பிடித்து இழுத்து சென்றார். பக்கத்தில் இருந்தவர்கள் சத்தம் கேட்டு அங்கே வந்துவிட்டார்கள். அப்போது மீண்டும் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு எதிரி தப்பி சென்றுவிட்டார். அன்று அதிகாலை 3.00 மணியளவில் 108 ஆம்புலன்ஸில் செல்வியை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். செல்வி கீழே விழுந்தபோது சுயநினைவை இழந்து விட்டார். அவர் திருச்சியில் ஒரு மாதத்திற்கு மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டார். தற்போதும் சுயநினைவின்றி கோமா நிலையில் தான் அசா. 1 ன் பராமரிப்பில் செல்வி இருந்துவருகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால், எதிரி தரப்பில் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரி சொன்னார்.

Ending Time: 4.00 PM.

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br><br>Preliminary Register<br>**Sessions** | **Sessions Case No. : 3/2022** |

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness for** | **Prosecution** | **:** | **P.W. : 3** |
| | Defence | : | D.W. : |
| | Court | : | C.W. : |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அஞ்சலை | வயது | : | 65 |
| க/பெ. | : | அழகப்பன் | தொழில் | : | கூலி |
| முகவரி | : | ஓலைப்பாடி | | : | |
| வட்டம் | : | குன்னம் | | : | |
| மாவட்டம் | : | பெரம்பலூர் | | | |

நான் என்ன கூறுகிறேனோ, அதுவே உண்மை என்றும், அவை அனைத்தும் உண்மையென்றும் உண்மையைத் தவிர வேறு இல்லை என்றும் கடவுளின்பெயரிலும் என்னுடைய மனசாட்சிக்குட்பட்டும் உறுதிமொழி ஏற்கிறேன்.

Starting Time: 4.05 PM Date: 26.10.2022

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஓலைப்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரயின் மனைவி பெயர் செல்வி. அவர்கள் இருவரும் ஓலைப்பாடியில் குடும்பம் நடத்தி வந்தார்கள். ஆஜர் எதிரி சென்னையில் கூலி வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரி இரண்டு அல்லது மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஊருக்கு வருவார். வரும்போதெல்லாம் அவரது மனைவி செல்வியிடம் அதிகமாக குடித்து குடிபோதையில் அடித்து , உதைத்து கொடுமை படுத்துவார். சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஆஜர் எதிரி சென்னையிலிருந்து அசா. 1 வீட்டுக்கு வந்து அவரது மனைவியை அவரது வீட்டுக்கு வருமாறு கூப்பிட்டார். அன்று

மாலை 5.00 மணியளவில் செல்வி ஆஜர் எதிரயின் வீட்டுக்கு சென்றார். அன்று இரவு சுமார் 1.00 மணியளவில் அசா.1 அவரது பேரன் கூப்பிடுவதாக எங்களை கூப்பிட்டார். நாங்கள் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி தேவடியா, தட்டுவாணி என செல்வியை திட்டி அவரது கையால் செல்வியின் மூக்கில் குத்தி கீழே தள்ளிவிட்டார். அதனால் செல்வி கற்களில் விழுந்ததில் அவரது தலை மற்றும் முகத்தில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி செல்வியை அவரது தலைமுடியை பிடித்து இழுத்து வந்தார். இந்த சம்பவம் வரதராஜ் என்பவர் வீடு கட்டுவதற்காக அஸ்திவாரம் போட்டுள்ள இடத்தில் நடந்தது. ஆஜர் எதிரி என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று கூறினார். ஆஜர் எதிரி அடித்து கீழே விழுந்ததில் செல்வி சுயநினைவின்றி கோமா நிலையில் உள்ளார். பின்னர் செல்வியை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். அங்கு செல்விக்கு ஒரு மாதத்திற்கு மேல் சிகிச்சை அளித்தார்கள். தற்போதும் செல்வி கோமா நிலையில் தான் அசா.1 வீட்டில் இருந்து வருகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கிஞர் ஆஜரில்லை என்பதால் எதிரி தரப்பல் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரி கூறினார்.

Ending Time: 4.15 PM.

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br><br>Preliminary Register<br>**Sessions** | } | **Sessions Case No. : 3/2022** |

| | | | | |
|---|---|---|---|---|
| **Deposition of witness for** | **Prosecution** | **:** | **P.W.** | **: 4** |
| | Defence | : | D.W. | : |
| | Court | : | C.W. | : |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமசாமி | வயது | : | 73 |
| த/பெ. | : | பச்சைமுத்து | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | : | ஓலைப்பாடி | | : | |
| வட்டம் | : | குன்னம் | | : | |
| மாவட்டம் | : | பெரம்பலூர் | | | |

நான் என்ன கூறுகிறேனோ, அதுவே உண்மை என்றும், அவை அனைத்தும் உண்மையென்றும் உண்மையைத் தவிர வேறு இல்லை என்றும் கடவுளின்பெயரிலும் என்னுடைய மனசாட்சிக்குட்பட்டும் உறுதிமொழி ஏற்கிறேன்.

Starting Time: 4.15 PM Date: 26.10.2022

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஓலைப்பாடியில் வசித்து வருகிறேன் . நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என் மனைவி பெயர் ராணி. எனக்கு கிருஷ்ணமூர்த்தி, இளவரசு என்ற மகன்களும், லட்சுமி என்ற மகளும் உள்ளனர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஆஜர் எதிரி சந்திரசேகர் அவரது மனைவியை அடித்தது சம்பந்தமாக கேள்விபட்டு அந்த இடத்திற்கு பார்க்க சென்றிருந்தேன். என்னுடன் செல்லம்மாள் என்ற பெண்ணும் வந்து பேசிக்கொண்டிருந்தார். அப்போது மணி மாலை சுமார் 3.15 இருக்கும். அப்போது அங்கே குன்னம் போலீசார் வந்தார்கள். அந்த இடத்தை பார்வையிட்டு எழுதிக்கொண்டார்கள், படம் வரைந்தார்கள். அதற்கு என்னையும்,

செல்லம்மாளையும் சாட்சி கையெழுத்து போடச்சொன்னார்கள். நாங்கள் பார்வை மகசரில் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையெழுத்து (சாட்சியிடம் பார்வை மகசர் காண்பிக்கப்பட்டது) என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து அதசாஆ. 2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் எதிரி தரப்பில் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரி சொன்னார்.

Ending Time: 4.20 PM.